**செய்தி வெளியீடு எண்: 85** **நாள்: 27.1.10**

.

<u>பத்திரிகைச்செய்தி</u>

சென்னை மாநகர் (ம) புறநகர் பகுதிகளில் உள்ள பெரம்பூர், திருவொற்றியூர், வில்லிவாக்கம், ஆவடி, தி.நகர், சைதாப்பேட்டை, பரங்கிமலை, சோழிங்கநல்லூர், ஆகிய எட்டு மண்டலங்களில் புழக்கத்திலுள்ள குடும்ப அட்டைகளை 100% வீடு வீடாகச் சென்று தணிக்கை செய்யும் பணி முடிக்கப்பட்டுள்ளது. தணிக்கையின்போது இல்லாத குடும்பங்கள் மற்றும் முகவரி மாறிய குடும்பங்களின் குடும்ப அட்டைகளுக்கு பொருள் வழங்கல் நிறுத்தம் ஆணைகள் சம்மந்தப்பட்ட உதவி ஆணையாளரால் பிறப்பிக்கப்பட்டு அங்காடியில் <u>21.12.2009</u> முதல் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. இந்த பொருள் நிறுத்தம் ஆணைகள் தொடர்பாக முறையீடு செய்ய ஏதுவாக இதுகாறும் பொருள் பெற்று வந்த நியாய விலை அங்காடியிலேயே முறையீடு படிவம் அச்சடித்து **<u>இலவசமாக</u>** வழங்கப்படுகிறது. பொருள் நிறுத்தம் செய்யப்பட்ட அட்டைதாரர்கள் முறையீடு படிவம் பெற்று, அதனை உரிய ஆவணங்களுடன் இணைத்து <u>30.01.2010</u>-க்குள் சம்பந்தப்பட்ட கடையில் ஒப்படைத்து, ஒப்புதல் பெற்றுக் கொள்ளவேண்டும்.

பொருள் நிறுத்த ஆணையில் இடம்பெறாத குடும்ப அட்டைதாரர்கள் அவர்கள் பொருள்கள் பெற்றுவரும் கடையிலேயே தொடர்ந்து பொருள்கள் பெற்றுக்கொள்ளலாம். இந்த பட்டியலில் இடம்பெறாத குடும்ப அட்டைதாரர்கள் **<u>குடும்ப அட்டையின் நகல் ஏதும் (xerox copy) கடையில் கொடுக்கத்தேவையில்லை.</u>**

இந்த மண்டலங்களைச் சேர்ந்த குடும்ப அட்டைதாரர்கள் அவர்களது குடும்ப அட்டை பொருள் வழங்கல் நிறுத்த ஆணையில் இடம் பெற்றுள்ளதா என்பதனை இத்துறையின் இணையதளமான **<u>http://www.consumer.tn.gov.in/cardstatus</u>** -ல் அறிந்து கொள்ளவும் படிவத்தையும், நிறுத்த ஆணையையும் தரவிறக்கம் (Download) செய்வதற்கும், வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இது தவிர இந்த மண்டலங்களைச் சேர்ந்த குடும்ப அட்டைதாரர்கள் பிஎ!;என்எல் செல்லிடை தொலைபேசி சேவை குறுஞ்செய்தி தகவல் மூலம் அவர்களது குடும்ப அட்டை

பொருள் வழங்கல் நிறுத்த ஆணையில் இடம் பெற்றுள்ளதா என்பதனை அறிந்துகொள்ளலாம். உதாரணமாக 02/G/0536496 என்ற அட்டையின் எண் உள்ள குடும்ப அட்டைதாரர் பதிவு செய்யவேண்டும் எனில் " **CARD 02G0536496** " என செல்பேசியில் தட்டச்சு செய்து, **54368** என்ற எண்ணிற்கு குறுந்தகவல் (SMS) அனுப்பி விவரம் தெரிந்துகொள்ளலாம்.

மேற்கண்ட 8 மண்டலங்களைச் சேர்ந்த குடும்ப அட்டைதாரர்கள் அவர்களது குடும்ப அட்டை பொருள் வழங்கல் நிறுத்த ஆணையில் இடம்பெற்றிருப்பின், முறையீட்டு மனுவினை சம்பந்தப்பட்ட நியாய விலைக் கடையிலிருந்து பெற்று அதில் விவரங்களைப் பூர்த்தி செய்து குடும்ப அட்டை நகல் மற்றும் இருப்பிட ஆதார (வாக்காளர் அடையாள அட்டை நகல், வீட்டு வரி ரசீது நகல், ஓட்டுநர் உரிம நகல், பா!;போர்ட் நகல்,எரிவாயு சிலிண்டர் நிரப்பு ரசீது, அஞ்சல் துறை வழங்கும் இருப்பிட அடையாள அட்டை நகல், வங்கி சேமிப்பு புத்தக நகல்) நகலை இணைத்து நியாய விலைக்கடையிலேயே கொடுத்து ஒப்புதல் சீட்டு பெற்றுக் கொள்ள வேண்டும். **முறையீடு மனுக்கள் 30.01.2010 -க்குள் அங்காடியில் கொடுக்கப்பட வேண்டும். இதில், மேலும் காலநீட்டிப்பு ஏதும் வழங்கப்படமாட்டாது.**

**மேற்படி தேதிக்குள் முறையீடு மனுக்களை ஒப்படைக்காத குடும்ப அட்டைதாரர்களின் குடும்ப அட்டைகள் இரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

(ஒம்.)க. ராஜாராமன்,
ஆணையாளர்.

* * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**

.